**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.3451/ஆ5/2024, நாள்.03/12/2024**

*****

பொருள் பள்ளிக் கல்வி – பள்ளி மன்ற செயல்பாடுகள் – சிறார் திரைப்படம் திரையிடுதல் 2024–2025 – அரசு நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 6 முதல் 9ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் கண்டுணர்தல் – சிறார் திரைப்படம் திரையிடுதல் – டிசம்பர் மாதம் – வழிகாட்டும் நெறிமுறைகள் வழங்குதல் – சார்ந்து

பார்வை சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.34785/எம்1/இ1/2023, நாள். 02.12.2024

*****

2022–2023 மற்றும் 2023–2024ம் கல்வியாண்டில் அனைத்து அரசு நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9–ம் வகுப்பு வரை பயின்று வரும் மாணவர்கள் கண்டுணறும் வகையில் ஒவ்வொரு மாதத்தின் இரண்டாவது வாரத்தில் சிறார் திரைப்படங்கள் திரையிடப்பட்டன. மாணவர்கள் தாங்கள் வாழும் சூழலை புரிந்து கொள்ளுதல், பல்வேறு காலாசாரங்களின் தனித்தன்மையை அறிந்து கொள்ளுதல், பல்வேறு கலாசாரங்களின் தனித்தன்மையினை அறிந்து கொள்ளுதல், தன்னம்பிக்கை, நட்பு பாராட்டுதல், குழுவாக இணைந்து செயல்படுதல், பாலின சமத்துவம் உணர்தல் ஆகிய பண்புநலன்களை அடையாளம் காணுதல், தங்களிடம் உள்ளார்ந்து புதைந்திருக்கும் படைப்பாற்றலை வெளிக்கொணர செய்தல் ஆகியன இச்சிறார் திரைப்படம் திரையிடுதலின் நோக்கமாக அமைகிறது.

ஒரு திரைப்படத்தை வெறுமனே நகரும் பிரேம்களாக பார்ப்பதை விட உலக சினிமா பற்றி குழந்தைகளுக்கு ஒரு பரந்த கருத்தை வழங்குவது, பள்ளிகளில் மாணவர்களின் கல்வியை வேறுபட்ட முறையில் அணுகுதல், கலை, கலாசாரம் மற்றும் திரைப்படங்களை ஒருங்கிணைந்து பிள்ளைகளின் கற்பனைத்திறன், படைப்பாற்றலை வளர்த்தல் மேலும் இத்திரைப்படங்களை கண்ணுறும் மாணவர்களின் விரிசிந்தனை மேம்படுதல் மற்றும் விமர்சிக்கும் திறன் உள்ளிட்ட பண்புகள் பெற இந்நிகழ்வு தூண்டுதலாக அமைகிறது.

**<u>மூவி கிளப்பின் நோக்கங்கள்:</u>**

- திரைப்படங்களை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்யவும், திரைப்பட நுட்பங்களைப் புரிந்துகொள்ளவும், பல்வேறு வகைகள் மற்றும் கருப்பொருள்களுக்கு இடையில் வேறுபடவும், ஊடக கல்வியறிவு மற்றும் விமர்சன சிந்தனையை வளர்க்கவும் மாணவர்களை ஊக்குவிக்கவும்.
- திரைப்பட விமர்சனங்கள், திரைக்கதை எழுதுதல், நடிப்பு அல்லது திரைப்படத் தயாரிப்பு மூலம் மாணவர்கள் தங்கள் எண்ணங்கள், யோசனைகள் மற்றும் முன்னோக்குகளை ஆக்கப்பூர்வமாக வெளிப்படுத்த ஒரு தளத்தை வழங்குதல்.
- கேமராக்கள், எடிட்டிங் மென்பொருள், லைட்டிங் மற்றும் ஒலி போன்ற திரைப்படத் தயாரிப்பு தொடர்பான தொழில்நுட்ப திறன்களை வளர்ப்பதற்கான வாய்ப்பை மாணவர்களுக்கு வழங்குங்கள், இது தொழில் ஆர்வங்களை ஊக்குவிக்கும்.
- சினிமாத் துறையில் கதை எழுதுதல், திரைக்கதை, இயக்கம், எடிட்டிங், இசை போன்ற பல்வேறு பணிகளில் ஈடுபடும் நபர்களுடன் கலந்துரையாடுவதற்கான வாய்ப்புகளை வழங்குவது.
- திரைப்படக் கலையில் ஆர்வமுள்ள மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு, திரைப்படம் தயாரிக்கும் அம்சங்களின் அடிப்படையில் போட்டிகளில் பங்கேற்பது.

**<u>திரைப்பட விவரம்:</u>**

ஒவ்வொரு மாதமும், இரண்டாவது வாரத்தில் சிறார் திரைப்படம் திரையிட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாதமும் திரையிடப்படவுள்ள திரைப்படம் முன்கூட்டியே மாதத்தின் முதல் வாரத்தில் EMIS வழியே தலைமையாசிரியருக்கு அனுப்பி வைக்கப்படும்.

இந்த ஆண்டின் இரண்டாம் சிறார் திரைப்படமாக **"பெனோ"** என்கின்ற திரைப்படம் உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி டிசம்பர் – 2024 ஆம் மாதத்தில் திரையிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திரைப்படம் பள்ளிகளில் திரையிடுதல் சார்ந்து பள்ளி தலைமையாசிரியர்கள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டும் நெறிமுறைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

அனைத்து அரசு நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9-ம் வகுப்பு வரை பயின்று வரும் மாணவர்கள் கண்டுணரும் வகையில், டிசம்பர் – 2024ஆம் மாதத்திற்கு திரையிடப்படவுள்ள திரைப்படம் பள்ளிகளில் திரையிடுதல் சார்பாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள செயல்முறைகளில் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி செயல்படுமாறு அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணித்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல் –**

**ஒன்றிய அளவில் –**

வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பள்ளிகளில் சிறார் திரைப்படம் திரையிடப்படுதலை உறுதி செய்து உரிய பார்வை விவரங்களை பள்ளிப்பார்வை செயலியில் பதிவு செய்ய வேண்டும்.

**மாவட்ட அளவில் –**

மாவட்ட அளவில் மாவட்டக் கல்வி அலுவலர்கள், உதவி திட்ட அலுவலர்கள், பள்ளித் துணை ஆய்வாளர்கள், வட்டார கல்வி அலுவலர்கள் சிறார் திரைப்படம் திரையிடுதலை உறுதி செய்து பார்வையிட்டு பள்ளிப் பார்வை செயலியில் பதிவு செய்தல் வேண்டும்.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை தவறாமல் பின்பற்றி ஒவ்வொரு மாதமும் மாநில திட்ட இயக்ககத்தால் பரிந்துரைக்கப்படும் திரைப்படத்தினை பள்ளிகளில் 6 முதல் 9 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு திரையிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்டக் கல்வி அலுலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி) அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு – பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தொடக்கக்கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (இவ்லுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. தலைமையாசிரியர்கள்,
   அரசு நடுநிலை / உயர் / மேல்நிலைப் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக இணையதளம் மூலமாக)

நகல்–

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
   மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) மூலமாக
3. உதவி திட்ட அலுவலர், வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
4. வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள்,
   (உதவி திட்ட அலுவலர் மூலமாக)
5. பள்ளித் துணை ஆய்வாளர்கள்
   (முதன்மைக் கல்வி அலுவலகம் / மாவட்டக் கல்வி அலுவலகம்)
   (சார்ந்த அலுவலர் மூலமாக)